# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## நிமல் சிறிபால த சில்வா மன்றம் (கூட்டிணைத்தல்)

**நிமல் சிறிபால த சில்வா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*பதுளை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) ரோஹன புஷ்பகுமார அவர்களால் 2012, மே மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.*

*(2012, ஏப்பிறல் மாதம் 09 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

---

[ *167 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## நிமல் சிறிபால த சில்வா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

நிமல் சிறிபால த சில்வா மன்றம் என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட குறிக்கோள்களையும் எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்காக இதுவரை பதுளையில் தாபிக்கப்பட்டுள்ள தாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம் எப்பல்வேறு குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித் துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம், 2012 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, நிமல் சிறிபால த சில்வா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

நிமல் சிறிபால த சில்வா மன்றம் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நிமல் சிறிபால த சில்வா மன்றத்தின் தற்போதைய உறுப்பினர் களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "நிமல் சிறிபால த சில்வா மன்றம்" எனும் பெயரின்கீழும், மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமைகொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டுமென்ப தோடு, அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும்

2-PL 005735 -50 (2012/03)

வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதா யிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது :-

(அ) வறிய பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர், யுவதிகளுக்கு அவர்களின் கல்விச் செயற்பாடுகளை இடையறாமல் பேணிவர இயலுமாக்கும்பொருட்டு உதவிகள், பரிசுகள் மற்றும் புலமைப்பரிசில்களை வழங்குதலும் அவர்களின் கல்வி, கலாசார மற்றும் விஞ்ஞானரீதியான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதலும் நிலையான மற்றும் நடமாடும் நூல்நிலை யங்களை நிறுவுதலும் ;

(ஆ) பாடசாலை மாணவர்களினதும் இளைஞர்களினதும் கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்தும் எதிர்பார்ப் புடன் கருத்தரங்குகள், செயலமர்வுகள், விரிவுரைகள், கண்காட்சிகள், போட்டிப் பரீட்சைகள் மற்றும் கல்விச் சுற்றுலாக்களை ஏற்பாடு செய்தல், அவர்களின் விளையாட்டு மற்றும் கலைசார்ந்த திறமைகளை ஏதேனும் ஒழுங்குமுறைக்கமைய முன்னேற்றும் பொருட்டு போட்டிகள் மற்றும் பயிற்சி முகாம்களை நடத்துவதும், திறன்களைக்கொண்ட மாணவர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுப்பயணங்களுக் கான உதவிகளை வழங்குதலும் பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்க நடவடிக்கை மேற் கொள்ளலும் ;

(இ) ஆட்களுக்கு தலைமைத்துவப் பயிற்சியளித்தல் மற்றும் இளைஞர்களின் உழைப்பினை பொதுமக்களின் நலனோம்பலுக்காக ஈடுபடுத்தலும் ;

(ஈ) பாடசாலையைவிட்டு நீங்கிச் செல்பவர்களின் கலை சார்ந்த ஆக்கங்களின் மேம்பாட்டுக்கு, விளையாட்டுத் திறமைகள் மற்றும் தொழினுட்ப அறிவு மேம்பாட்டுக்காக வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களைத் தாபித்தல் அத்துடன் கணணியியல் மற்றும் தொழினுட்ப கல்விக்கு தூண்டுதலளிக்க உதவும்பொருட்டு அத்தகைய பயிற்சிகளை வழங்கும் நிறுவனங்களைத் தாபிக்க அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ;

(உ) பல்கலைக்கழகங்களுக்கும் தொழினுட்பக் கல்லூரிகளுக்கும் தெரிவுசெய்யப்படுகின்ற மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கி உதவுதல், தொழிலற்ற இளைஞர்களுக்கு சுயதொழில்வாய்ப்புக்களை உறுதி செய்தலும் கடன்வசதிகளை வழங்கும்பொருட்டு பல்வேறு சேமிப்புத் திட்டங்களை அறிமுகஞ் செய்தலும் ;

(ஊ) வறிய பிள்ளைகளின் முன்பிள்ளைப்பருவ அபிவிருத்திக்காக முன்பள்ளிகளைத் தொடங்கி பேணிவருதலும் வயதுவந்தவர்கள், பாடசாலை மாணவர்கள், பாடசாலையில் இருந்து விலகிச் செல்வோருக்காக பல்வேறு மொழிகள் மற்றும் பல்வேறு பாடங்களுக்காக வகுப்புக்களைத் தொடங்கி பேணிவருதலும் அவர்களுக்குப் பிற வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தலும் ;

(எ) காணி மற்றும் வீடுகளுக்கான உரிமையற்றவர்களுக்கு காணிகளையும் வீடுகளையும் வழங்குதல், நீர்த் தட்டுப்பாடு நிலவுகின்ற பிரதேசங்களில் நீர் விநியோகத் திட்டங் களை ஆரம்பித்தல், இயற்கை அனர்த்தங்களைத் தடுக்கவும் குறைக்கவும் நடவடிக்கை எடுத்தல், வசதிகள் குறைந்த பாடசாலைகளுக்கு கட்டடங்களை அமைத்துக் கொடுத்தல் அத்தகைய பாடசாலைகளில் நிலவுகின்ற ஏனைய குறைபாடுகளை நிவர்த்தி செய்தல், பல்வேறு பிரதேசங்களில் வீதிகள், மின்சாரம் மற்றும் சுகாதாரம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் ;

(ஏ) இன, மத மற்றும் சாதிபேதமற்றவகையில் கல்வி, சமய, கலாசார, அழகியல், விஞ்ஞானம் மற்றும் விளையாட்டு வசதிகளின் அபிவிருத்திக்கு உதவி செய்தலும் பல்வேறு போட்டிகளையும் கண்காட்சிகளையும் நெறிப்படுத்தலும் ;

(ஐ) வறிய, அநாதை மற்றும் நோய்வாய்ப்பட்டோருக்கு மருத்துவ உதவிகளையும் உணவினையும் வழங்குதல், இடம்பெயர்ந்தவர்களுக்கும் வயோதிபர்களுக்கும் இல்லங்களைத் தொடங்கிப் பேணிவருதல், சிறுவர் மற்றும் வயோதிபர்களுக்கான சிறுவர் இல்லங்கள் மற்றும் பகல்நேரப் பராமரிப்பு நிலையங்களை ஆரம் பித்துப் பேணிவருதல் ;

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கத்துடன் கண்காட்சிகள், விரிவுரை கள், கருத்தரங்குகள், உரையாடல்கள், செயலமர்வுகள், விவாத மேடைகள், குழுக் கலந்துரையாடல்கள், சுற்றுப் பயணங்கள், உல்லாசப் பயணங்கள் அல்லது அத்தகைய பிற செயற்பாடுகளை ஏற்பாடுசெய்தல், திட்டமிடல் மற்றும் மேம்படுத்தல், அந்நோக்கங்களை அடைய அவசியமான அத்தகைய நூல்கள், பருவ வெளி யீடுகள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் செய்தித்தாள் களை அச்சிடல், பிரசுரித்தல் மற்றும் விநியோகித்தல் ;

(ஓ) கட்புலனற்ற, பேச்சுத் திறனற்ற, செவிப்புலனற்ற, வலதுகுறைந்த வயோதிபர்கள் இடம்பெயர்ந்தவர் களுக்கு வசதிகளை வழங்குவதற்கான இல்லங்களை ஆரம்பித்துப் பேணிவருதல் ; அத்துடன்

(ஔ) ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒன்றிணைத்தலும், ஒத்துழைத்தலும்.

*கூட்டுத்தாப னத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**4.** (i) இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்குக் கட்டுப்பட்ட தாகவும் அப்போதைக்கு கூட்டுத்தாபனத்தில் வலுவிலுள்ள விதிகளுக்கு அமைவாகவும் தெரிவுசெய்யப்படுகின்ற தவிசாளர், செயலாளர், உப செயலாளர், பொருளாளர் மற்றும் ஏனைய ஒன்பது பேர்களைக்கொண்ட பணிப்பாளர் சபையொன்றினால் கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(ii) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர் சபை, இச் சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்தின் நிர்வாக சபையில் பதவிவகித்தவர்களை உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும்.

(iii) தவிசாளரைத் தவிர்ந்த பணிப்பாளர்கள் சபை உறுப்பினரொருவர் மரணமடைதல் அல்லது பதவி விலகல் காரணமாக அவரது பதவியை முன்கூட்டியே கைவிட்டாலே யொழிய, நான்கு வருடங்கள் பதவி வகித்தல் வேண்டும். மரணமடைதல் அல்லது பதவி விலகல் காரணமாக பணிப்பாளர் சபையில் பதவி வெற்றிடம் தோன்றியவிடத்து அவ்வெற்றிடத்தைப் பூர்த்திசெய்ய புதிய உறுப்பினரொருவர் நியமிக்கப்படல் வேண்டுமென்பதோடு, அப்புதிய உறுப்பினர் நான்கு வருடங்கள் பதவிவகித்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

**5**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு கட்டுப்பட்டதாக கூட்டுத்தாபனத்தின் அதிகாரங்களாவன :-

(அ) கூட்டுத்தாபனத்தின் சார்பாக ஏதேனும் அசையும் அசையாத ஆதனத்தை கொள்ளல், வைத்திருத்தல், எடுத்தல் அல்லது கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஏதேனும், அசையும் அசையாத ஆதனத்தை குத்தகைக்கு விடல், ஈடுவைத்தல், பிணையாகப் பெறல், விற்றல், கொடுத்து மாற்றல் அல்லது வேறுவகையில் பாராதீனப் படுத்தல், பாரபந்தம் செய்தல் மற்றும் கையாளுதல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானதெனக் கருதுகின்ற அனைத்துவிதமான உடன்படிக்கைகளையும் ஒப்பந்தங்களையும் நேரடியாக செய்துகொள்ளல், அவற்றை நடைமுறைப்படுத்தல், ஈடேற்றல் அல்லது கூட்டுத்தாபனத்தின் சார்பில் அதிகாரம்பெற்ற அலுவலரொருவர் அல்லது பிரதிநிதி மூலமாக நடைமுறைப்படுத்தச் செய்வித்தல் ;

(இ) வெகுமதிகள், நன்கொடைகள் மற்றும் ஆணைகளை காசாகவோ அல்லது பொருளாகவோ ஏற்றுக் கொள்ளல் ;

(ஈ) கூட்டுத்தாபனம் பொருத்தமானதாகக் கருதுகின்ற விதத்திலான பிணைகளின்பேரில் காசு முற்பணத்தை வழங்குதல், கடன் வழங்குதல் அல்லது கடனாகப் பெறல் ;

(உ) தனது நிதியங்களை முதலீடு செய்தல், நம்பிக்கைப் பொறுப்புக்களை உருவாக்கி நிர்வகித்தல் மற்றும் ஏதேனும் வங்கியில் நடைமுறை சேமிப்பு வைப்புக்கள், சேமிப்புக் கணக்குகளையும் பேணிவரல் ;

(ஊ) நூல்கள், பருவ வெளியீடுகள், சஞ்சிகைகள் மற்றும் பிற ஆவணங்களைப் பிரசுரித்தல் அல்லது பிரசுரிக்கச் செய்வித்தல் மற்றும் நூல்நிலையங்கள், நூல் விற்பனை நிலையங்கள் மற்றும் அச்சகங்களை ஆரம்பித்தலும் பேணிவருதலும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அமுலாக்கும் பொருட்டு அவசியமான உத்தியோகத்தர்களையும் ஊழியர்களையும் நியமித்தல், சேவையில் ஈடுபடுத்தல், இடமாற்றம் செய்தல், அவர்கள் தொடர்பிலான ஒழுக்கக் கட்டுப்பாட்டினை பேணுதல், சேவையிலிருந்து நீக்குதல் மற்றும் அவர்களுக்கான சேவை நியமங்களையும் நிபந்தனைகளையும் விதித்தல் ; அத்துடன்

(ஏ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ள அவசியமானதும், இடைநேர் விளைவானவையும், உசிதமானவையுமான ஏனைய எல்லாக் கருமங்களையும் காரியங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மைகொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்திற்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(அ) உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளல், அவர்கள் பதவிவிலகல் அல்லது அவர்களை விலக்குதல் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தெரிவுசெய்தல், அவர்களின் பதவிவிலகல் அல்லது பதவியை வறிதாக்குதல், அவர்களைப் பதவிநீக்கஞ் செய்தல் மற்றும் அவர்களின் அதிகாரங்கள், நடத்தைகள் மற்றும் பணிகள் ;

(இ) பணிப்பாளர் சபை உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல், அதன் தத்துவங்கள், நடத்தைகள் மற்றும் பணிகள், சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் மற்றும் சபை உறுப்பினர்களின் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்தல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு பதவிதாங்குநர்களின், பிரதிநிதிகளின் மற்றும் ஊழியர்களின் அதிகாரங்கள், நடத்தைகள், பணிகள் மற்றும் கடமைகள் ;

(உ) பணிப்பாளர் சபையின் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும் தொடர்பான நடவடிக்கைமுறையும், அத்தகைய கூட்டங்களின் நேரங்கள் பற்றிய அறிவித்தல்களும் நிகழ்ச்சிநிரலும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும், அத்தகைய கூட்டங்களில் கடைப்பிடிக்கவேண்டிய நடவடிக்கைமுறையும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமைசெய்தலும் ;

(எ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளலும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி (1) ஆவது உப பிரிவின்கீழ் விதிகள் ஆக்கப்படுகின்ற அதே விதத்திலும் அதுபோன்ற கூட்டத்திலும் திருத்தவும், மாற்றவும் அதற்கு ஏதேனுமொன்றைச் சேர்க்கவும் அல்லது நீக்கஞ்செய்யவும் முடியும்.

(3) கூட்டுத்தாபனத்தின் அங்கத்தவர்கள் கூட்டுத்தாபனத்தில் அப்போதைக்கு வலுவில் உள்ள விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

மன்றத்தினால் செலுத்தப்பட வேண்டிய மற்றும் அதற்கு வருமதியாக வுள்ள கடன்கள்.

**7.** இச்சட்டம் அமுலுக்குவரத் தொடங்கிய தேதிக்கு நேர்முந்திய திகதியன்று மன்றத்தில் நிலவிய சகல கடன்களும் பொறுப்புக் களும் இத்தால் கூட்டிணைக்கப்படுகின்ற கூட்டுத்தாபனத்தினால் செலுத்தித் தீர்க்கப்படல் வேண்டுமென்பதோடு, அத்தினத்தன்று மன்றத்திற்குச் செலுத்தப்படவேண்டிய அனைத்துக் கடன்கள், அங்கத்துவப் பணம், சந்தாப்பணம் இச்சட்டத்தின் நோக்கத்திற் காக கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**8.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதோடு, இதற்குமுன்னரோ அல்லது இதன்பின்னரோ வெகுமதிகள், ஆணைகள், நன்கொடைகள், அங்கத்துவப் பணம், சந்தாப்பணம், கட்டணங்கள் அல்லது அளிப்புக்களாக ஏற்கப்படுகின்ற சகல பணத்தொகைகளும் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான வங்கியில் அல்லது வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் கணக்கொன்றில் வரவுவைக்கும்பொருட்டு வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழான கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் அதன் தத்துவங்களை அமுலாக்குகையிலும் ஈடேற்றுகையிலும் பாவனையின்போதும் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்டுள்ள எந்தவொரு செலவினமும் செலுத்தித் தீர்க்க அவசியமான அனைத்துப் பணமும் நிதியத்தில் இருந்து செலுத்தப்படல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசையும், அசைவற்ற ஆதனங்களை வைத்திருத்தல்.

**9.** கொள்வனவு, அளிப்பு, குத்தகைக்குவிடல், இறுதிவிருப்பாவணக் கையளிப்புமூலமாகவோ வேறுவகையாகவோ கையுதிர்ப்பதினால் உடைமையாகியுள்ள அசையும், அசைவற்ற எந்தவொரு ஆதனத்தையும் வைத்திருப்பதற்கும் சுவீகரிப்பதற்குமான ஆற்றலையும் தகுதியையும் கூட்டுத்தாபனம் கொண்டிருப்பதோடு, அத்தகைய ஆதனம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, அப்போதைக்கு வலுவில் உள்ள விதிகளுக்கு கட்டுப்பட்டதாக அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குவிட, கொடுத்து மாற்ற அல்லது வேறுவிதமாக கையுதிர்ப்பதற்கான முழுத்தத்துவத்தையும் கூட்டுத்தாபனம் கொண்டிருத்தலும் வேண்டும்.

அங்கத்தவர்களின் பொறுப்புக்கள் பற்றிய வரையறைகள்.

**10.** கூட்டுத்தாபனத்தின் கடன்கள் மற்றும் பொறுப்புக்களை செலுத்தித்தீர்க்கும் பணிக்காகவோ பிற பணிக்காகவோ கூட்டுத்தாபனத்தின் எந்தவோர் அங்கத்தவரும் அவரிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கவேண்டிய அங்கத்துவக் கட்டணத்தை விஞ்சுகின்ற ஏதேனும் உதவுதொகையைச் செலுத்தக் கட்டுப்பட மாட்டார்.

*கலைப்பின் போது எஞ்சியுள்ள ஆதனங்கள்.*

**11.** கூட்டுத்தாபனம் கலைக்கப்படுகையில் அதன் அனைத்துக் கடன்களும், பொறுப்புக்களும் தீர்க்கப்பட்ட பின்னர் எஞ்சுகின்ற ஏதேனும் ஆதனம் இருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் அங்கத்தவர்களிடையில் பகிர்ந்தளிக்கப்படுதல் தடை செய்யப்பட்டுள்ளவிடத்து கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களையொத்த நோக்கங்களைக்கொண்ட வேறு நிறுவனம் அல்லது நிறுவனங்கள் சிலவற்றுக்கு, அந்நிறுவனத்திடம் அல்லது அந்நிறுவனங்களிடம் கையளிக்கப்படல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் யாவையென அவ்வாறு கலைக்கப்படும்வேளையிலோ கலைக்கப்படமுன்னரோ மன்றத்தின் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும், கணக்காய்வும்.*

**12.** (1) கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்த சகல பணத்தொகைகள் மற்றும் கூட்டுத்தாபனத்தினால் செய்யப்பட்ட செலவுகள் பற்றிய முறையான கணக்குகளை கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினால் பதியச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக அமைதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படுகின்ற கணக்காய்வாளர் ஒருவரால் அல்லது கணக்காய்வாளர்களால் ஒவ்வோராண்டிலும் குறைந்தபட்சம் ஒரு தடவையேனும் கூட்டுத்தாபனத்தின் கணக்குகளைப் பரிசோதித்து கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**13.** கூட்டுத்தாபனத்தின் தவிசாளர் மற்றும் பணிப்பாளர் சபையின் எவரேனும் உறுப்பினர் முன்னிலையிலன்றி கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எந்தவொரு சாசனத்திலும் பொறிக்கப்படலாகாது. சட்டமுறையான ஆவணமொன்றில் கைச்சாத்திட சமுகமாயிருந்தமைக்குச் சாட்சியாக அதன்மீது பெயரை எழுதிக் கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாக கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

**14**. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், குடியரசின் உரிமைகளையேனும் ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**15**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்